செ.வெ.எண்: 33 நாள்: 14.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் எட்டாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் எட்டாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி தமிழகம் முழுவதும் எட்டாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்று வருவதை தொடர்ந்து வேளாங்கண்ணி பேரூராட்சியில் யாத்திரைகள் தங்கும் மையத்திலும், செருதூர் நடுநிலைப்பள்ளியிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நகராட்சிக்குட்டபட்ட மருந்துகொத்தலத் தெருவில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் வெள்ளப்பள்ளம் ஊராட்சியில் உள்ள புயல் பாதுகாப்பு மையம், கள்ளிமேடு அரசு உயர்நிலைப் பள்ளி, புஷ்பவனம் ஊராட்சி கிராம நிர்வாக அலுவலக கட்டிடம், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் நெய்விளக்கு ஊராட்சி மன்ற கட்டிடம் ஆகிய இடங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் கோவிட் - 19 கொரோனா பெருந்தொற்று பரவலை முழுமையான வகையில் கட்டுபடுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி **“மெகா தடுப்பூசி முகாம்”** நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்றினை கட்டுப்படுத்திட தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதுவரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற 7 கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றதில் கிராம பகுதியில் 2,140 மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றுள்ளன. நகரப் பகுதியில் 311 மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றுள்ளது. மொத்தம் 2,451 முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதுவரை நடைபெற்ற 7 முகாம்களில் முதல் தவணையாக 73,771 நபர்களும், இரண்டாம் தவணையாக 97,247 நபர்களும், மொத்தம் 1,71,018 நபர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற 8வது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம், கிராம பகுதியில் 350 முகாம்களும், நகர் பகுதியில் 48 முகாம்களும், மொத்தம் 398 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இன்று 25,000 பேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடைபெறும் முகாம்களில் மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் மற்றும் நடக்க முடியாத நபர்களுக்கு வீட்டிற்கே சென்று தடுப்பூசி போட சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுபட்டு போன முன்களப்பணியாளர்கள், முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் மற்றும் இரண்டாவது தடுப்பூசி தவணை செலுத்திக் கொள்ளவுள்ள நபர்கள் தானாக முன்வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**